திராவிட நாட்டமைப்பின் முதல் போராட்டம்

திராவிடநாடு

மலர் 11 | 10—5 53 | இதழ் 45

விலை 2 அணா

இழிவு தரும் டால்மியாபுரத்தை எடுத்தெறிவோம்!

கல்லக்குடியில் களம் அமைக்கிறார் கருணாநிதி

வெற்றி முரசை விரைவில் கேட்போம்

லால்குடி மாநாட்டில் சம்பத் முழக்கம்

26–4–53-ல் லால்குடியில் நடைபெற்ற தி. மு க. அரசியல் மாநாட்டில் தோழர் ஈ வி. கே. சம்பத் அவர்கள் ஆற்றிய தலைமை உரை இங்கு தரப்படுகிறது:

அன்புள்ள அண்ணா அவர்களே! திருச்சி மாவட்ட இரண்டாவது அரசியல் மாநாட்டின் பிரதிநிதிகளே! தாய்மார்களே! தோழர்களே!

இம்மாநாட்டிற்கு என்னைத் தலைமை தாங்குமாறு பணித்த, மாநாட்டின் வரவேற்புக் குழுவினருக்கும், வழி மொழிந்த நண்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல கூட்டு முறையில், எல்லாப் பொறுப்புகளையும் உயர்வு தாழ்வின்றி எல்லோரும் பகிர்ந்து பொறுப்பேற்று நடத்தும் ஒரு உன்னதமான ஜனநாயக அமைப்பாக இயங்கி வருகிறது. அதனால்தான் இவ்வளவு குறுகிய காலத்தில் நமக்கிருக்கும் எண்ணற்ற வசதிக் கேடுகளுக்கிடையே இவ்வளவு பெரிய மகத்தான வளர்ச்சியை நம்மால் காணமுடிகிறது. நடத்திய போராட்டங்களில் எல்லாம் வெற்றி நம்மை அணைத்துக்கொள்ளும் பெருமையான வாய்ப்பையும் பெற்றுள்ளோம்.

உலகம் முழுவதும் துக்கமும் சோகமும் கப்பிக்கொண்டிருக்கிற காலக் கட்டத்தில்தான் இம்மாநாடு கூடியிருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய தலைவன் லெனினின் வழி வந்தவரும், இன்றைய உலகத் தலைவர்களின் சாதனைகளை நன்றாகப் புரிந்து பின் தங்கிக் கிடந்த ரஷிய நாட்டு மக்களின் வாழ்வில் வளம் சொரிய திட்டங்கள் தீட்டி வெற்றி கண்டவரும், உலக உழைப்பாளிகளின் உள்ளத்தில் நம்பிக்கைத் தீபம் ஏற்றிவைத்தவருமான தோழர் ஸ்டாலின் அவர்களின் மறைவு உலகோரைக் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ள இந்த நேரத்தில் நாம் கூடியுள்ளோம். மேலும், நமது இயக்கம், கடந்த சில மாதங்களில் அடுத்தடுத்து இயக்கத்தின் சீரிய தொண்டர்களான தோழர்கள் மஜீது, சென்னை பாண்டியன் ஆகியோரையும், அண்மையில் நம்முடனிருந்து வழிகாட்டி, தலைமை தாங்கி நம்மை நடத்திச் செல்லத் தயாராகவும் அதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுக்கொண்டு, நமக்கெல்லாம் நம்பிக்கையூட்டியும், அறிவியக்கத்தின் ஆதிகாலத் தலைவர்களில் மிகச் சிறந்த தலைவராய் இருந்து அரும்பணி ஆற்றியவருமான பட்டிவீரன்பட்டி தோழர் டபுள்யு. பி. ஏ. சவுந்தரபாண்டியன் அவர்களையும், அறிவியக்கத்தின் தொடக்ககாலத்தில், குடியரசு ஏட்டின்மூலம் நாட்டில் பெரும் புரட்சியை உண்டாக்குவதற்கான அருமையான சூழ்நிலையைச் சிருஷ்டித்துத் தந்த பேரறிஞர் கைவல்யம் அவர்களையும் இழந்து பெரும் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் நேரத்தில், இம்மாநாடு கூட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது. பொதுப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு துக்கம் கொண்டாடவும், மகிழ்ச்சி கொண்டாடவும் காலம் இடந்தராது என்ற அறிஞர் வாக்கைமெய்ப்படுத்துவதாகவே இம்மாநாடு அமைந்துள்ளது.

உலகுக்கேற்பட்ட நஷ்டம், நமது இயக்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டம்— இவைகளால் உண்டான சோகம் தீருமுன்னமே, நாம் நமது நாட்டுக்கு, நமது இனத்துக்கு, இழைக்கப்பட்டுள்ள அநீதியை, அவமானத்தைத் துடைக்க ஒரு போராட்டத்துக்கு உடனடியாகத் திட்டம் தீட்டிச் செயல் புரிய ஆவன செய்ய வேண்டிய நிலையில் இன்று இங்கே கூடியுள்ளோம். துக்கத்தை ஒதுக்கிப் போட்டுவிட்டு உற்சாகம் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம்.

திராவிடத்தில், வடநாட்டுக்காரன் ஒருவன் பெயரால், புகைவண்டி நிலயத்திற்குப் பெயர்! போர்பலபுரிந்துவெற்றிவாகைசூடிய மாவீரனா? அல்ல. அரசியலில் அரும் சாதனைகள் புரிந்த அருந் தலைவனா? நம்மவனா? அல்ல. வாணிபத்தின் பெயரால், டில்லியின் பாதுகாப்பில் நம் செல்வத்தைச் சுரண்டி வாழும் தொழில் அதிபன் — டால்மியா — வடநாட்டுக்காரன் — அவன் பெயரால், தமிழகத்துச் சிற்றூர் கல்லக்குடிக்கு டால்மியாபுரம் என்னும் பெயரில் ஒரு புகைவண்டி நிலயம். இதைவிட வேறு அவமானத்தை— அநீதியை, ஒரு இனத்திற்கு எதுவும் இழைக்கமுடியாது. இதை அனுமதிப்பது—சகித்துக் கொண்டிருப்பது பெரும் இழிவு. இந்நிலையிலிருந்து நமது இனம் மீள, மீண்டும் தனது தன்மானத்தை நிலைநாட்டிக்கொள்ள உடனடியாக ஓர் திட்டம் தீட்டப்படவேண்டும். நாடும் கழகமும் இதற்கு இத்தனை நாட்களாய் அண்ணாவைத்தான் எதிர்நோக்கிக்கொண்டிருந்தது. இப்போராட்டம், இன்பத் திராவிடத்தை அடைய நடத்தும் போராட்ட வரலாற்றிலே, முதல் அத்தியாயமாக அமையட்டும்.

நாட்டுப் பிரிவினைக்கான வாதங்களையும் விளக்கங்களையும் பற்றி இதுவரை குரல் கொடுத்து மக்கள் ஆதரவைத் திரட்டியுள்ள நமது கழகம் இன்று போராட்டங்களை நடத்திச் செயல் புரியும் பருவத்திற்கு வந்துள்ளது-நாட்டுமக்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறது. இந்தச் சமயத்தில் நாட்டுப் பிரிவினைத் திட்டத்தின் சுருக்கமான வரலாற்றை நாம் நினைவுபடுத்திக் கொள்ளுதல் நல்லது.

இன்று கொல்லைப்புற வழியே நுழைந்து கொலு வீற்றிருக்கும் தோழர் ஆச்சாரியார், 1939-ல் இந்தச் சென்னை ராஜ்யத்தின் முதல் மந்திரியாக இருந்தகாலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் துணைகொண்டு, வடவரின் ஏகாதிபத்தியத்திற்கு எதிர்காலத்தில் நமது நாட்டில் நல்ல அடிமைகள் கிடைக்க ஓர் சதித்திட்டம் சட்டமாக்கப்பட்டது. அதன்படி பள்ளிகளில் மாணவர்களுக்கு இந்தி மொழி கட்டாய பாடமாக்கப்பட்டது. இன்று போல் அன்று நமது இயக்கத்திற்கு வளர்ச்சியில்லையாயினும், நமது இயக்கம் தான் அன்று கட்டாய இந்தியை எதிர்த்துப் பெரும் போராட்டத்தைத் தலைமை வகித்து நடத்தியது. ஆயிரக்கணக்கானவர்கள் ஆண்களும் பெண்களும் சிறை சென்று சொல்லொணாத் துயருக்காளாகினர். இயக்கத்தின் தலைவர்களான பெரியார், அண்ணா ஆகியோர் சிறையிலிருந்தபோது வேலூரில் தமிழர் மாநாடொன்று பன்னீர்ச்செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் எஸ். எஸ். பாரதியார் போன்ற பெரும் புலவர்கள் கலந்து கொண்டனர். வடமொழி ஆதிக்கம் வடவர் ஆதிக்கத்துக்கு முன்னேற்பாடு என்பதை அறிந்து கொண்ட அம்மாநாடு, தமிழ் நாடு தமிழருக்காக வேண்டும் எனத் தீர்மானித்தது. சிறை சென்ற தலைவர்கள் மீண்டனர். மீண்ட தலைவர்கள் அந்தத் தீர்மானத்தை இயக்கத்தின் இலட்சியமாக்கினர். அச்சமயத்தில் நமது இயக்கத்தில் இருந்த சில ஆந்திர, மலையாள, கன்னடத் தோழர்கள், வடவரை எதிர்த்துத் தமிழகம் மட்டும் ஏன் பிரிய வேண்டும்? ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய திராவிட மொழிகள் பேசும் மாகாணங்களும் பிரிந்து தீர வேண்டும். அதற்கும் சேர்த்து ஓர் திட்டம் தேவை என்றனர். அப்போதே காஞ்சியில், அண்ணா அவர்கள் திராவிடர் கழகம் என்று ஒரு சங்கத்தைத் தோற்றுவித்து இருந்தார்கள். அந்த அடிப்படையில் சிந்தித்து விவாதித்துத்தான் தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய சுயநிர்ணய உரிமையோடு கூடிய நாடுகள் வலிந்து 'இணைந்து' அமைக்கும் திராவிடக் கூட்டாட்சியைப்பெற இயக்கம் இனிப்போராடுவது எனத் தீர்மானிக்கப் பட்டது.

பின்னர் அக் கூட்டாட்சி குடியரசாக மட்டுமின்றி ஒரு சமதர்மக் குடியரசாகவும் விளங்க வேண்டும் என்பது நமது இலட்சியமாக அமைய வேண்டும் என விரும்பிய அண்ணா அவர்கள் சேலத்தில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில் முக்கியமான இரண்டு தீர்மா

(4-ம் பக்கம் பார்க்க)

செயற்குழு

தி. மு. க. செயற்குழு, கீழ்க்காணும் விதமாக அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை கழகத் தோழர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தோழர்கள்

கே. கே. நீலமேகம் (பொருளாளர்)
இரா. நெடுஞ்செழியன் (துணைச் செயலாளர்)
கே. ஏ. மதியழகன் (துணைச்செயலாளர்)
ஈ. வெ. கி. சம்பத் (சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர்)
ஜே. பி. சோமசுந்தரம்
மு. கருணாநிதி
என். வி நடராசன்
சத்யவாணி-முத்து
ஆசைத்தம்பி
நெல்லை. வீரபாகு
மதுரைமுத்து
திருச்சி. எம். எஸ். மணி
சிதம்பரம். பாலகுருசாமி
நாகர்கோயில். ஜான்
காஞ்சி. சி. வி. எம். அண்ணாமலை
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி

பொதுக்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள்

அ. பொன்னம்பலனார்
சி. பி. சிற்றரசு
கே. ஆர். ராமசாமி

மூவரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சட்டதிட்ட திருத்தக்குழு

நடைமுறையில் காணப்படுகிற குறைபாடுகளைக் கவனித்து, சட்டதிட்டங்களில் திருத்தங்களை வகுத்து, பொதுக்குழுவில் கொண்டுவரத் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழகன், கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

அண்ணாதுரை,
பொதுச் செயலாளர், தி. மு. க.

திராவிடநாடு

காஞ்சி] 10—5—53 [ஞாயிறு

ஆர். கே. எஸ். மறைவு

நாட்டின் பொருளாதார சீர்கேட்டை நன்குணரவும், அதற்கேற்பப் பொருளாதாரச் சீர்குலைவைச் செம்மைப்படுத்தவும் வல்லவராய் விளங்கிய ஒரு அரசியலறிஞரை நாடு இழந்துவிட்டது. டாக்டர் ஆர். கே. சண்முகம் அவர்கள் இரத்தக் கொதிப்பினாலும், இருதயக் கோளாறினாலும், 5—5—53ல் கோயமுத்தூரிலுள்ள அவரது இல்லத்தில் 61வது வயதில் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தி கேட்டதும், எவருக்கும், அதாவது அரசியல் தொடர்புள்ள அனைவருக்கும் நாம் மேலே குறிப்பிட்டிருக்கும் சொற்றொடர்கள்தான் நினைவுக்கு வரும். அந்த அளவுக்கு அவர் அரசியல் உலகிலே — பொருளாதாரத் துறையிலே வல்லுநராய் இருந்தார். பல இடங்களில் அவருடைய சேவை, நல்ல பயனை அளித்திருக்கிறது என்று கூறுவது, மிகையாகாது.

எதிர்க்கட்சிக்காரர்கள்கூட அவருடைய அறிவைக் கடன் வாங்கிக் கொள்ளுமளவுக்குத் திறமைசாலியாக இருந்தார். ஆங்கிலேயர் ஆட்சி முடிந்து, வடவரின் ஆட்சி, அதாவது காங்கிரசாட்சி இவ்வுபகண்டத்தில் ஏற்பட்டதும், காங்கிரஸ்காரர்கள், அரசியல் அனுபவமும் திறமையும் இல்லாத காரணத்தால், அதில் திறமைசாலிகளாக இருந்த பல எதிர்க்கட்சிக்காரர்களைக் கடன் வாங்கி அரசியலமைப்பை வகுத்தார்கள். அப்படிக் கடன்வாங்கப்பட்டவர்களில் ஆர். கே. சண்முகம் அவர்களும் ஒருவர்.

டில்லி அரசாங்கத்தின் நிதி அமைச்சராக மறைந்த டாக்டர் சண்முகம் அவர்களும், சட்ட அமைச்சராக டாக்டர் அம்பேத்கார் அவர்களும் சில காலம் பணியாற்றி உதவிபுரிந்துள்ளார்கள். பின்னர் அவர்கள் இருவருமே காங்கிரஸ் அரசாங்கத்தின் பதவிப்பிடியிலிருந்து விலகிக் கொண்டார்கள்.

மறைந்த தோழர் சண்முகம் அவர்களின் அரசியல் பொருளாதார அறிவு கடல்கடந்து செல்லுமளவுக்குத் திறமையுடையதாக இருந்தது. ஒட்டாவா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன் முதலான இடங்களுக்கு, டாக்டர் சண்முகம் அவர்கள் பொருளாதார நிபுணர் என்ற முறையில் அனுப்பப்பட்டு, வெற்றி கண்டார்.

கொச்சியில் அவர் திவானாக இருந்தபோது, அவரால் செய்யப்பட்ட பல காரியங்களை இன்னும் கொச்சியிலுள்ள மக்கள் பாராட்டுகின்றனர்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அவருடைய அரசியலறிவு கிடைக்கும் வாய்ப்பு அவ்வளவாக ஏற்படவில்லை என்ற போதிலும், தமிழ் மக்கள் அவரை எப்போதும் பாராட்டிப் புகழ்ந்தே வந்திருக்கிறார்கள். அவர் மறைந்துவிட்டார் என்ற செய்திகேட்டதும், தமிழகம், தான் பெற்றெடுத்த ஒரு அரசியலறிஞரை இழந்துவிட்டதே என்ற ஏக்கம் எம்மையெல்லாம் கப்பிக்கொண்டு துன்பத்திலாழ்த்திற்று.

அவரது பிரிவால் வருந்தும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், நமது ஆழ்ந்த ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகிறோம்.

வேண்டாம் இந்த வீண் திட்டம்

வேலையில்லாத் திண்டாட்டம் திக்கெட்டும் பரவிவிட்டது. எங்காவது வேலை கிடைக்குமா என்று தேடி அலைவதையே வேலையாகக் கொண்ட மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகிறது. உயிரோடிருக்கும் வரையில் ஏதாவது ஒருவேலையைச் செய்து தானே வாழ்க்கையை நடத்த வேண்டுமென்ற எண்ணமே மக்களாய்ப் பிறந்தவர்களுக்கு உண்டாகக் கூடாது, என்பது நமது கருத்தும் முடிவுமாகும். அந்த எண்ணம் உண்டாகும் நிலைமை ஒரு நாட்டில் ஏற்படக்கூடாது. அப்படி ஏற்பட்டால், அந்த நாடு, ஆளும் திறமையற்றவர்கள் கையில் சிக்கிச் சீரழிகிறது என்றுதான் பொருள். ஒரு நாட்டிலுள்ள மக்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள் — தவிக்கிறார்கள் என்றால், அதற்கு யார் பொறுப்பு? நாட்டைக் கட்டிக்காக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள அரசாங்கம்தானே அதற்கும் பொறுப்பு. நாட்டை ஆள்வது என்றால், மக்களை ஆள்வது என்றுதானே பொருள் கூறப்படுகிறது.

நாட்டிலே மக்கள் உள்ளனர்—காட்டிலே விலங்குகள் உள்ளன. மக்கள் அறிவுள்ளவர்கள்—விலங்குகள் அறிவற்றவை. அறிவுள்ளவர்களை ஆள அரசாங்கம் இருக்கிறது—தேவைப்படுகிறது. ஆனால் அறிவற்றவையை ஆள யாரும் கிடையாது—தேவையுமில்லை! இது எப்படியோ போகட்டும், பெரிய ஆராய்ச்சிக்குரிய ஒன்றை இங்கு கொண்டுவந்து ஏன் குழப்ப வேண்டும்!

மக்களை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள அரசாங்கம், அந்தப் பொறுப்பைச் செவ்வனே செய்து முடிப்பதற்காக மக்களிடமிருந்து வரி வசூலிப்பது என்ற ஒரு முறையையும் கையாண்டு வருகின்றது.

இந்த வரி வசூலிக்கும் முறை சரியோ, தவறோ, அது ஒருபுறமிருக்க, மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கே வரி வசூலிக்கிறோம் என்று கூறும் அரசாங்கம், ஏன் அந்த மக்களை வேலையில்லாத் திண்டாட்டத்திலும், பிற தொல்லைகளிலும் விட்டு, அவர்கள் படும் வேதனையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதுதான், நமக்குப் புரியவில்லை.

வரி வசூலிப்பதென்பது, இருப்பவனிடம் வாங்கி இல்லாதவனுக்குக் கொடுப்பது—அதாவது வருவாய் அதிகம் உள்ளவனிடமிருந்து, அவனுடைய வருவாயில் ஒரு பகுதியை வாங்கி; வருவாயே இல்லாதவனுக்கு வாழ வழிசெய்து கொடுப்பது என்பதுதான் வரி வசூலிப்பதற்கு உரிய—ஏற்ற காரணமாகக் கூறப்படுகிறது.

ஆனால், இங்கோ, இருப்பவன் இல்லாதவன் என்ற ‘பேதமே’ பாராட்டுவதில்லை. இருந்தாலுஞ் சரி, இல்லாவிட்டாலுஞ் சரி, வரி கொடுத்தே ஆகவேண்டும்.

இந்த வரி வசூலிக்கும் முறையைக் கண்டுபிடித்தவரைத்தான், அரசியலறிவில் அதியற்புதத் திறமை படைத்தவர் என்று பாராட்டுகிறார்கள். பாராட்டட்டும், நமக்கேன் பெரிய இடத்துத் தொல்லை.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று பார்த்தால், ஓ! எடுத்திருக்கிறதே! வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனம் என்ற புதிய அமைப்பை ஏற்படுத்தி, அதில் சிலர் வேலை பார்க்கும் அரும் பெரும் காரியத்தைச் செய்திருக்கிறது!

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இப்போது அதைவிடப் பெரிய ஒரு திட்டத்தை அரசாங்கம் அரிய பெரிய ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறது. அதுதான் ஆரம்பக் கல்வித் திட்டத்தின் அரும் பெரும் மாறுதல்.

இந்த மாறுதலால், இனி வேலையின்மையே நாட்டில் ஏற்படாது! அவ்வளவு உயர்ந்த மாறுதலை ஆரம்பக் கல்வித் திட்டத்தில் செய்யப் போகிறது அரசாங்கம்.

1953 அல்லவா இப்போது நடக்கிறது; 1959ல் பாருங்களேன், வேலையில்லாத் திண்டாட்டமே துளியும் இருக்காது. இந்த ஆண்டிலிருந்து புதிய மாறுதலோடு கூடிய ஆரம்பக் கல்வித் திட்டம் ஆரம்பமாகப் போகிறது.

மாணவர்கள், தாங்கள் கற்கும் கல்வியோடு, வேலையும் கற்றுக் கொள்ள ‘நல்ல வாய்ப்பை’ அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. ஆறு மணியாக இருந்த கல்வி நேரத்தை மூன்று மணியாகக் குறைத்து, எஞ்சியுள்ள மூன்று மணி நேரத்திலும் வேலை கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வேலை என்றால், எப்படிப்பட்ட வேலை? ஒரு மாணவன் எந்த வேலைக்குத் தகுதி என்று காணப்படுகிறானோ, அந்த வேலையையா அரசாங்கம் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது! அதுதான் இல்லை. அப்படிச் செய்திருந்தால், அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளவர்களிடம் ஓரளவுக்கு அறிவும் அனுபவமும் இருக்கிறதென்றல்லவோ பொருள் ஏற்பட்டுவிடும். அரசாங்கம் ஏற்பாடு செய்திருப்பது அதுவல்ல. குடும்பத் தொழில்! அதாவது, தந்தை எந்த வேலையைச் செய்கிறாரோ அந்த வேலையையே பிள்ளையும் செய்யவேண்டுமென்பது.

தந்தை தச்சு வேலை செய்பவராய் இருந்தால் பிள்ளையும் தச்சு வேலையே செய்ய வேண்டும். அப்படியென்றால், புரோகிதர் வேலை செய்பவரின் பிள்ளை புரோகிதம் தானே செய்ய வேண்டுமென்று கேட்பீர்கள். ஆம், அப்படித்தான் இருக்கிறது, ஆரம்பக் கல்வித் திட்டத்தின் புது மாறுதலில். ஆனால், இது நடைமுறையில் இருக்குமா? நடைமுறைக்குக் கொண்டு வரப்படுமா? முடியுமா? என்பன போன்ற ஐயப்பாடுகளை நம்மால் நீக்கிக் கொள்ள முடியவில்லை. கல்வித் திட்டத்தில் மாறுதலைச் செய்த அரசாங்கம்தான் இந்த ஐயப்பாடுகளையும் போக்கித் தெளிவுரை வழங்க வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டுமென்று கருதும் அரசாங்கம், வேலையை உண்டாக்காமல், வேலை செய்பவர்களையே மேலும் மேலும் அதிகமாக உண்டாக்க ஏற்பாடு செய்கிறது. செய்வதற்கு வேலை இல்லாமல், வேலை செய்பவர்களை அதிகமாக உண்டாக்கினால், எப்படி வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும் என்பது நமக்கு விளங்கவில்லை. நகை செய்வதற்கு நாலு பேர் போதுமென்றால், அந்த வேலைக்கு நாற்பது பேரை உண்டாக்கினால், அப்படிப்பட்ட அரசாங்கத்தைப் பார்த்து யார்தான் நகைக்காமல் இருக்க முடியும்!

வேலை தெரிந்தவனுக்கே வேலை கிடைக்கவில்லை என்ற இரங்கத்தக்க நிலையிலுள்ள ஒரு நாட்டில், வேலைக்காரர்களைப் பெருக்கும் வீண் திட்டம் ஏனோ தெரியவில்லை. கைத்தறி வேலை செய்பவன் கண் கலங்கி நிற்கிறான், பயிர்த் தொழில் செய்பவனைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது, ஆலைத் தொழிலாளி அவதிப்படுகிறான், கோலாரில் தங்கமெடுத்தவன், வேலூரில் தங்கம் கிடைக்குமா அல்லது வேறெங்கேனும் தான் தங்கம் கிடைக்குமா என்ற வேதனையோடு நிற்கிறான். இவர்களுக்கெல்லாம் வேலை தேடிக் கொடுக்க வக்கற்ற அரசாங்கம் வேலைக்காரர்களை உற்பத்தி செய்யப் புதுத்திட்டம் வகுக்கிறதாம்!’ அதுவும் எப்படிப்பட்டவர்களுக்கு வேலை கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது தெரியுமோ? ஏழு வயது முதல் பதினொன்று வயது வரையுள்ள சிறுவர்களுக்கு. அதாவது, அறிவை வளர்ப்பதற்கு அடிப்படையாகவுள்ள ஆரம்பக் கல்வி பயிலும் சின்னஞ் சிறுவர்களுக்கு, அறிவு ஏற்பட்ட பின்னர் கற்றுக் கொள்ளவேண்டிய தொழிலறிவைக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

இந்த ஏற்பாடு, அறிவைப்பெறும் ஆரம்ப முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதோடு, மக்கள் சமுதாய முன்னேற்றத்துக்கும் முட்டுக்கட்டை போடுவதாகும் என்பதை இந்தத் திட்டத்தை வகுத்துக் கொடுத்தவர்களும், அதை நடைமுறைக்குக்கொண்டுவரும் அரசாங்கமும் உணர்ந்து, இந்த வேண்டாத வீணான திட்டத்தைக் கைவிட்டு, மக்கள் அனைவருக்கும் வேலை கிடைத்து, நல்வாழ்வு வாழ வைக்கும் நல்ல திட்டங்களை வகுத்து நடைமுறைக்குக் கொண்டுவர முன்வரவேண்டுமென்று விரும்புகிறோம்.

யார் எந்த வேலைக்குத் தகுதி, திறமையுடையவர்கள் என்பதை ஆரம்பக்கல்வி கற்கும்போது அறிந்துகொள்ள முடியாது. ஆரம்பக்கல்வி முடிந்து, உயர்தரக் கல்வி கற்கும்போதுதான், ஒரு மாணவன் எந்தத் துறையில் தன் அறிவைச் செலுத்துகிறான் என்பதை அறிந்து கொள்ளமுடியும். அதன்பின்னர் அந்த மாணவனின் அறிவுக்கு ஏற்ற, தொழிற் கல்வியைக் கற்றுக்கொடுக்கும் ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அங்ஙனமன்றி, ஏர்பிடிக்கமுடியாத குழந்தைக்கு உழவுத் தொழிலும், உளி தூக்க வலுவற்ற சிறுவனுக்குத் தச்சுத்தொழிலும், தராசு பிடிக்கத் தெரியாத தனயனுக்கு நகை செய்யுந் தொழிலும், மண்வெட்டி தூக்கமுடியாத மழலைக்குச் சட்டிபானை செய்யுந் தொழிலும், நெருப்பின் பக்கத்தில்கூடச் செல்ல அனுமதிக்கப்படாத சிறுவனுக்கு இரும்பு வேலையும், கத்தியைக் கையில் எடுத்தால் என்ன நேரிடும் என்பதறியாத இளவலுக்குச் சவரத் தொழிலும் கற்றுக் கொடுத்தால் நிலைமை என்ன ஆகும் என்பதைக் கூடவா அந்தத் திட்டத்தை வகுத்தவர்கள் அறியமுடியவில்லை! அறிந்தவர்கள்தான் — அறியக்கூடியவர்கள்தான். ஆனால், அவர்களின் நோக்கம் மக்கள் முன்னேறி நல்வாழ்வு வாழவேண்டுமென்பதல்லவே. ஆழமான பள்ளந்தோண்டி அதிலே அடக்கம் செய்யப்பட வேண்டிய நிலைமையில் இருக்கும் சாதிப்பாகுபாடுகளுக்குப் புத்துயிர் அளித்து, அவைகளை நாட்டில் நடமாடவிடும் கொடுமையும் துரோகமுமான காரியத்தை [illegible] செய்ய முனைந்திருக்கிறார்கள். எனவேதான் வேண்டாம் இந்த வீண் திட்டம் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறோம்.

★

அரசாங்கப் பொருளாதாரம்

(ஏ. இருதயராஜ், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிப் போசிரியர்.)

[தனிக்குடும்பத்தின் பொருளாதாரப் பிரச்னைகளுக்கும் அரசாங்கத்தின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் உள்ள பேதங்களைப் போசிரியர் இருதயராஜ் முன்னைய கட்டுரை ஒன்றில் விளக்கி இருந்தார். இந்தக் கட்டுரையில் அரசாங்கத்தின் வரிவிதிப்பு முறைகளை விளக்குகிறார்.]

வரி விதிப்பு முறைகள்

யாருக்கும் தாங்கமுடியாத தொல்லையே கஷ்டமோ நஷ்டமோ இல்லாமல் நியாயமான அடிப்படையில் வரிப்பளுவை எப்படி நிரவுவதென்பது விவாதத்துக்குரிய ஒருபிரச்னை.

அரசாங்கச் செலவினால் மக்கள் எல்லோருமே பயனடைகிறார்கள். எல்லோருடைய வருமானமும் குடும்ப பாரமும், சொந்த விவகாரங்களும் ஒரே மாதிரி இருந்தால், ஒரு சிரமமுமின்றி எல்லோரிடமிருந்தும் சமமான தொகையை வரியாகவசூல் செய்து விடலாம். ஆனால் உண்மையில் மக்களின் வருமானம் பலவிதமாக இருப்பதோடல்லாமல், ஒரே வருமானமுடைய குடும்பபாரமுமே ஒரேமாதிரி இருப்பதில்லை. அதனால் வரிப்பளுவை எப்படி எல்லோர் பேரிலும் சமமாகச் சுமத்துவது என்ற பிரச்சினை எழுகிறது.

உதவிக்குத் தக்க வரி

அரசாங்கத்திடமிருந்து ஒவ்வொருவரும் பெறும் உதவிக்குத் தக்கவாறு வரி விதிக்கவேண்டும், என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் இது நடைமுறையில் சாத்தியமாவென்பது சந்தேகம். தற்காலத்தில் அரசாங்கத்தின்செலவினங்களால் அதிகப்பயன் பெறுபவர்கள் பெரிதும் ஏழைகள். அனாதை விடுதிகளில் பாராமரிக்கப்படுபவர்களும் இலவசக் கல்வியால் பயன் பெறுபவர்களும், இலவச மருத்துவ மனைகளால் பயனடைபவர்களும் ஏழைகள்தான். பணக்காரர்கள் 'நேரடியாக' யாதொரு உதவியும் அரசாங்கத்திடமிருந்து பெறுவதில்லை.

அப்படியிருக்க அரசாங்கம்ஏழைகளுக்காகச் செலவழித்ததை எல்லாம் அவர்களிடமிருந்தே வரியாக வசூலித்து ஈடு செய்ய வேண்டுமென்றும் பணக்காரர்களிடமிருந்து வரியே வசூலிக்கக்கூடாதென்றும் ஏற்படுகிறது. இது மிகவும் ஆபத்தான கொள்கை. வரி கொடுக்க சக்தி உள்ளவர்களை விட்டு விட்டு, முடியாதவர்களிடமிருந்து வரி தண்டுவதென்பது நியாயமல்ல.

மேலும் அரசாங்கத்தின் சிலசெலவினங்களிலிருந்து மக்களுக்குப் பொதுவாக ஏற்படும் பயன்களை அளவிட்டு விகிதாசார முறையில் ஒவ்வொரு பிரஜையின் பங்கு எவ்வளவு என்று கணக்கெடுப்பதும் முடியாத காரியம்.

வருமானத்துக்குத்தக்க வரி

அரசாங்கத்தின் அமைப்பினாலும் அது தரும் பாதுகாப்பினாலுமே எவரும் பணம் சம்பாதிக்க முடிகிறது. அதனால் ஒவ்வொருவரும் அவரவருடைய வருமானத்திற்குத் தகுந்தாற்போல் வரி செலுத்தவேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் வரி கொடுக்கும் சக்தியை வருமானத்தைமட்டும் அடிப்படையாகக் கொண்டு அளவிடுவதும் நடைமுறையில் சாத்தியமல்ல. ஒரே வருமானமுடைய இருவரிடமிருந்து ஒரே வரித்தொகையை வசூலிப்பதுநியாயமல்ல. ஏனெனில் அவர்களிருவருக்கும் வாழ்க்கைப் பாரம் ஒரேமாதிரி இருக்காது.

சம விகிதாசார வரி விதிப்பு

வருமானத்தையே அடிப்படையாகக்கொண்டு வருமானத்தில் பத்திலொரு பாகமென்றோ இருபதில் ஒருபாகமென்றோ நூற்றுக்கு இத்தனை சதவிகிதம் என்றோ சம விகிதாசார முறையில் வரி வசூலிப்பது சரியல்ல.

உதாரணமாக மாதம் 100 ரூபாய் சம்பாதிக்கும் ஒருவன் 10 ரூபாய் வரி கொடுத்தால் 20 ரூபாய் சம்பாதிப்பவன் 2 ரூபாய் வரி கொடுக்க வேண்டுமென்பது, தொகையை கணக்கிடும்போது நியாயமாகத் தெரிந்தாலும், ஊன்றிப் பார்க்கும்போது உண்மை விளங்கும். 100 ரூபாய் சம்பாதிப்பவனிடமிருந்து 10 ரூபாய் வரியாக எடுத்துக்கொண்டாலும் அவனிடம் மிஞ்சியிருக்கும் 90 ரூபாயைக்கொண்டு அவன் சிரமமின்றி வாழ்க்கை நடத்தலாம். ஒருவனுக்கு சாப்பாட்டுக்கோ, குடும்ப அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கோ 20 ரூபாய் தேவையென்றால் 100 ரூபாய் சம்பாதிப்பவன் தனது அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு மேற்கொண்டும் மற்ற அவ்வளவு அவசரமில்லாத தேவைகளுக்கு 80 ரூபாய் வைத்திருக்கிறான். இந்த 80 ரூபாயிலிருந்து 10 ரூபாய் வரியாக எடுக்கப்படுவதனால் அவன் கஷ்டப்படுவதில்லை. ஆனால் அத்தியாவசியத் தேவைகளுக்குமட்டும் போதுமான 20 ரூ. மட்டும் சம்பாதிப்பவனுடைய சம்பளத்திலிருந்து 2 ரூபாய் எடுத்துவிட்டால் அவனது முக்கியத் தேவைகளில் சில பூர்த்தி செய்யப்படமாட்டாது என்பதைக்கவனிக்க வேண்டும்.

20 ரூபாய் சம்பாதிக்கும் ஒருவரிடமிருந்து அதில் ஐந்திலொரு பாகத்தை எடுப்பதால் ஏற்படும் சிரமத்திற்குச் சரியாக, 100 ரூபாய் சம்பளக்காரனும் சிரமமடைய வேண்டுமானால் அவனிடமிருந்து அவன் வருமானத்தில் ஐந்திலொரு பாகமல்ல அதற்கு மேலாகவே வசூலித்தால்தான் சாத்தியமாகும்.

உயரும் விகிதாசார வரி விதிப்பு முறை

வரி கொடுப்பதில் ஒருவரைவிட மற்றொருவர் அதிக சிரமப்படாமல் எல்லோருக்கும் ஒரே விதமான சிரமத்தை கொடுக்கும் விதத்தில் வரி விதிப்பதுதான் நியாயமானது. இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால் ஒரு குடும்பத்தின் வாழ்க்கையை நடத்தத் தேவையான ஒரு தொகையை நிர்ணயித்து அந்த தொகைக்குக் குறைந்த எல்லா வருமானங்கள்களையும் வரி விதிக்காமல் விட்டு விட வேண்டும். அந்தத் தொகைக்குமேல் இருக்கும் வருமானங்களையெல்லாம் உயரும் விகிதாசார முறையில் வரி விதிக்கலாம். உதாரணமாக வருஷத்துக்கு 3500 ரூபாய்க்குக் குறைந்து சம்பாதிப்பவர்களுக்கு வரியே இல்லாமலும் 3500 ரூபாய்க்கு மேல் 5000 ரூபாய் வரை சம்பாதிப்பவர்கள் ஒரு ரூபாய்க்கு 6 பைசா வீதமும், 5000-க்கு மேல் 8000 ரூபாய் வரை சம்பாதிப்பவர்கள் ரூபாய்க்கு 9 பைசா வீதமும், இப்படியே 30,000 ரூபாய்க்கு மேல் 6 அணா வீதமும் உயரும் விகிதத்தில் வரி வசூலித்தால் நியாயமாயிருக்கும்.

உயரும் விகிதாசார வரி விதிப்பு முறையை ஒத்துக்கொண்டால், சில அடிப்படைக் கொள்கைகளை ஒத்துக் கொண்டுதானாக வேண்டும். முதலாவது எல்லோருக்கும் முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்து வாழ்க்கைப்பாரத்தைசமாளிக்கஒரு குறிப்பிட்ட தொகை தேவைப்படும். அந்தத் தொகையின் மேல் எவ்வளவு குறைந்த வரி விதித்தாலும் அது நியாயமற்றது. இரண்டாவது ஒருவனுடைய வருமானம் அதிகரிக்க அதிகரிக்க அவனுக்கு பணத்தின் தேவை குறைகிறது. உதாரணமாக அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மட்டும் போதுமான பத்துரூபாய் சம்பாதிக்கும் ஒருவன் ஒரு ரூபாயைக் காணாமற் போட்டுவிட்டால் அதிகக் கஷ்டப் படுவான். ஆனால் அவசரத் தேவைகளுக்கு வேண்டியதற்கு அதிகமாக வைத்திருப்பவன் ஒரு ரூபாயைப் போக்கடித்து விட்டால் அவனுக்கு அவ்வளவு கஷ்டம் ஏற்படாது ஏனென்றால் அவன் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்தது போக மிஞ்சக்கூடிய தொகையிலிருந்தே, அதாவது அவ்வளவு அவசிய தேவையல்லாத காரியங்களுக்கு செலவுசெய்ய வைத்திருக்கும தொகையிலிருந்தே ஒரு ரூபாய் காணாமற் போய்விட்டதால் அதிக நஷ்டம் அடைவதில்லை

அதுபோலவே பரம ஏழை ஒருவனுக்கு 50 ரூபாய் இனாமாகக் கொடுக்கப்பட்டால் உணவு, உடை முதலிய இன்றியமையாத தேவைகளுக்காக அதைச் செலவிடுகிறான். மேற்கொண்டு 50 ரூபாய் கொடுத்தால் அதை அவ்வளவு அவசரமில்லாத தேவைகளுக்காகச் செலவிடுகிறான். மேலும் மேலும் அவனுக்கு பணம் கொடுத்தால் அனாவசியத் தேவைகளுக்கும் இன்னும் செய்யக்கூடாத செலவுகளையும் செய்ய முற்படலாம். இதிலிருந்து பணத்தினுடைய உபயோகம் அது அதிகரிக்க அதிகரிக்க குறைகிறது என்பது விளங்கும்.

ஆகவே சிரமமில்லாத வாழ்க்கைக்குத் தேவைப்படும் அளவுக்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்களிடமிருந்து வருமானம் உயர உயர, உயரும் விகிதாசார முறையில் வரி வசூலிக்க வேண்டும்.

மூன்றுவதாக உணவு உடை குடியிருப்பு முதலிய அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வது நாட்டு நலனுக்கு அவசியம். மற்ற அனாவசியத் தேவைகளுக்காக பணம் செலவிடப்பட்டால் அதனால் நாட்டுக்கு நன்மை ஏற்படப் போவதில்லை. அதனால் வாழ்க்கையின் முக்கியத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மட்டும் போதுமான வருமானம் உள்ளவர்களிடம் வரி வசூலிப்பது நாட்டுக்குகேடுவிளைவிக்கும். ஆனால் அனாவசியத் தேவைகளுக்காக செலவிடப்பணம் வைத்திருப்பவர்களிடமிருந்து அதிகமதிகமாக வரி தண்டுவதனால் நாட்டுக்குக் கெடுதல் ஏற்படாது.

குறையும் விகிதாசார வரி விதிப்பு முறை

வருமானம் அதிகரிக்க அதிகரிக்க வரிப்பளுவைக்குறைத்து, குறைந்த வருமானம் உள்ளவர்கள் மேல் அதிக வரியைச்சுமத்துவது ஒரு அநியாயமான வரி விதிப்பு முறை. இது விரும்பத்தகாத ஒரு முறையாதலால், பொது மக்கள் இம்முறையை சகித்துக் கொள்ளமாட்டார்கள் என்று நாம் நினைக்கலாம். ஆனால் நடைமுறையில் மக்களுக்குத் தெரியாமலே இம்முறைப்படி வரி வசூலிக்கப்படுகிறது. உப்பு வரியை எடுத்துக் கொண்டால், அது, உப்பை உபயோகிக்கும் அனைவரிடமிருந்தும் வசூலிக்கப்படுகிறது. அதை ஏழை பணக்காரர், அனைவரும் உபயோகிக்கிறார்கள். பணக்காரர், பணம்படைத்தகாரணத்தினால் ஏழைகளை விட அதிக உப்பு உட்கொள்ளுவதில்லை. ஆகவே எல்லோரும் உப்பை உபயோகிக்கும் அளவு ஒரே மாதிரிதான். அதனால் உப்பு வாங்கும்போது மக்கள்ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமின்றி ஒரே வரித்தொகையை செலுத்துகிறார்கள். அதாவது கஷ்டமின்றி அதிக வரி கொடுக்கக்கூடிய பணக்காரர்களும், வரியே கொடுக்க முடியாத ஏழைகளும்கூட ஒரே அளவு வரித்தொகை செலுத்துகிறார்கள். அதிக வருமானமுள்ளவர்கள் அதிகமதிகமாக வரிகளைச் செலுத்த வேண்டும் என்ற நியாயமான முறைக்கு இது மாறானது உப்பு வரியும் இன்னும் இன்றியமையாத அவசரத்தேவைப் பொருள்கள் மீது விதிக்கப்படும் மற்ற வரிகளும் மிகவும் கண்டிக்கப்படவேண்டியவை. விற்பனை வரிகள் ஏழை பணக்காரர் என்றபேதமின்றி எல்லோரிடமும் ஒரே மாதிரியாக வசூலிக்கப்படுகின்றன. அதனால் அவைகளும் அவ்வளவாக விரும்பத்தக்கவை அல்ல.

நியாயமான வரி விதிப்பு முறை

வருமானம் வளர வளர அதிகமான வரிகளை உயரும் விகிதாசார முறையில் வசூலிப்பதே நியாயமானது. அதிக வருமானமுள்ளவர்களிடம், முக்கிய தேவைக்குமேல் அதிக பணம் இருக்கிறது. வருமானம் அதிகரிக்க அதிகரிக்க பணத்தின் அருமை குறைகிறது. அதனால் உயரும் விகிதாசார முறையில் வரி விதிப்பதே சிறந்தது.

சமதர்மக் கொள்கைகள் எங்கும் பரவி, ஏழை பணக்காரர் என்ற பேதத்தை அடியோடு ஒழிப்பதற்கு முயற்சிகள் நடந்துவரும் இக்

(5-ம் பக்கம் பார்க்க)

P. T. C.

Become an Engineer, or a Technician and earn more than Rs. 200 a month by joining one of our following courses:—

1. Civil Engineering
2. Mechanical Enginecrig
3. Electrical Engineering
4. Radio Engineering
5. Wireless Telegraphy

Courses begin in June and run for 9 months.

ARTS COURSE

Success guaranteed to every student for S. S. L. C. Matric, Inter, B. A., B. Sc., Hons., B. Com.

Tution: Oral and Postal

Hostel and Laboratory attached

Special accomodation for Ladies.

Office:
29, Nandhi koil St.,
Teppakulam, Trichy.

P. V. PARTHASARATHI,
PRINCIPAL.

திருமணம்

—::—

'திராவிட நாடு' அலுவலகத் தோழர்:

R. K. மூர்த்திக்கும்

'திராவிட நாடு' அலுவலகத் தோழர் சி. இராசாபாதரின் மைத்துனி

A. சரசுவதிக்கும்

17—5—53-ஞாயிறு காலை, சூணாம்பேட்டைச் சேர்ந்த வில்லிபாக்கத்தில் (மதுராந்தகத்திலிருந்து பாண்டிச்சேரி செல்லும் பாதையில்) C N **அண்ணாத்துரை** அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னங்களைக் கொண்டுவந்தார். ஒன்று ஜஸ்டிஸ் கட்சியின் பெயரைத் திராவிடர் கழகமாக மாற்ற வேண்டுமென்பது. மற்றையது கட்சியில் சர்க்கார் அளித்த இராவ்பகதூர், சர் போன்ற பட்டங்களைத் தாங்கிக் கொண்டு எவரும் இருக்கக்கூடாது என்பதாகும். கட்சியில் இருந்த ஆலை அரசர்கள், செட்டி நாட்டு வேந்தர்கள் ஆகியோர் கட்சியை விட்டு ஓட்டம் பிடித்தனர். அரண்மனையில் இருந்த கட்சியை அண்ணா அவர்கள் அந்தத் தீர்மானங்கள் மூலம் மைதானத்திற்குக் கொண்டு வந்து மக்கள் கட்சியாக மாற்றினர். அதன் பிறகு சமுதாயத்தில் மறுமலர்ச்சியையும், பொருளாதாரப் பொதுஉடைமையையும், அரசியலில் திராவிட விடுதலையையும், லட்சியங்களாகக் கொண்டு திராவிடர் கழகம் நாட்டு மக்களை ஒன்று திரட்டியது. பின்னர், நல்ல ஜனநாயகப் பண்பு வளரத் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பு முறையை வகுத்தோம். உழைத்தோம். இவ்வளவு குறுகிய காலத்தில் மகத்தான மக்கள் ஆதரவை பெற்றிருக்கிறோம். என்றுமில்லாத அளவிற்கு நாட்டு விடுதலைத் திட்டத்திற்கு மக்கள் ஆதரவும் பெருகி நிற்கிறது.

அதுவும் 1947 ஆகஸ்டு 15-ல் இந்திய உபகண்டத்தின் ஆட்சி முறை வடநாட்டுக்காரர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டபிறகு கடந்த ஆறு ஆண்டுகளில் நமது நாடு அடைந்திருக்கும் அவலநிலை, ஆரம்பத்தில் நமது திட்டம் தேவையற்றது ஆபத்தானது என்று எண்ணியிருந்தவர்களின் ஆதரவை எல்லாம் கூடப் பெற்றிருக்கிறது. வடவர் கையில் ஆட்சி சிக்கியநாள் முதலாய் நமது நாட்டில் பஞ்சம், பசி, பட்டினி ஆகிய இந்த நிலைமைகளும், பட்டினிச்சாவு, பசியால், வேலையில்லாத் திண்டாட்டத்தால் குடும்பத்தோடு தற்கொலை, குற்றங்கள்மலிவு ஆகியவை சர்வசாதாரணமாகிவிட்டன. பருவ மழைகளும் தவறிவிட்டதால் வடவர் சுரண்டல் திரைமறைவில் நடைபெறமுடியாமல் பட்டவர்த்தனமாக எல்லோர் கண்ணுக்கும் தெரியத்தக்க அளவில் நடைபெற்றது இங்கு பசி;பட்டினி வேலையில்லாத் திண்டாட்டம், என்னும் துன்பச் சூறாவளி கடந்த ஆறு ஆண்டுகளாக வீசிவரும் இதே காலத்தில்,வடவர், வாழ்விலேவளம் ஏற்றம் ஆகியவைகளைக் கண்டு இன்புற்று வாழ்கின்றனர்.

டில்லிக்கு நாம் செலுத்தும் வரிகள் அனந்தம். ஆனால் அவைகளில் ரூபாய்க்கு எத்தனை தம்பிடி நமக்குச் செலவழிக்கப்படுகிறது என்று பார்க்கும்போது பெரியதொரு ஏமாற்றம்தான் கண்ணுக்குத் தெரிகிறது. கடந்தஆறு ஆண்டுகளில் டில்லி சர்க்காரின் கஜானாவின் ஆதரவோடு ஆரம்பித்துநடைபெற்றுவரும் பெரும் அணைக்கட்டுகள், தாமோதர் பள்ளதாக்குத் திட்டம், ஹிராகுட் அணைகட்டுத் திட்டம், கோசி நீர்த்தேக்கத் திட்டம்போன்ற பெரும் பெரும் திட்டங்கள், சிந்திரிஉர உற்பத்தித் தொழிற்சாலை, பென்னிஸியின் டி. டி. டி. மருந்து ஆகிய மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள் இன்னும் எண்ணற்ற தொழில் திட்டங்கள் ஆகியவைகள் அனைத்தும் வடநாட்டில் நடைபெற்று வருகின்றன. இங்கு சிறு சிறு நீர்த்தேக்கத் திட்டங்களுக்குக்கூட டில்லியின் பண உதவியில்லை.

நாம் வருஷா வருஷம் டில்லிக்கு இறக்குமதி ஏற்றுமதி வரிகள், வருமானவரி, புகையிலை வரி, தபால்கட்டணங்கள், இரயில்வே கட்டணங்கள், ஆகியவைமூலம் கோடிக்கணக்கான ரூபாய்களை கொட்டியழுகிறோம். நமது நாட்டில் 100-க்கு 80 பேர் படிப்பறிவில்லாதவராய் இருத்தலாலும், படித்தவரில் பெரும் பகுதி சுயநலமிகளாய் நாட்டைப்பற்றிய கவலையற்றிருத்தலாலும் இவைகள் விளைக்கும் பெருநஷ்டத்தைப்பற்றியும் நம் மக்கள் முழுதும் அறிந்துகொள்ள வாய்ப்பில்லாமல் இருக்கிறது. டில்லி சர்க்காரின் வருமானமாகிய சுமார் 400 கோடிரூபாயில் ஏறத்தாழ 200 கோடி ரூபாய் ஏற்றுமதி இறக்குமதி வரிகளின்மூலம் கிடைக்கிறது. அதில் நமது பங்கு மிக அதிகம். இங்கிருந்து கொச்சி, நாகை, சென்னை, விசாகப்பட்டினம், ஆகிய துறைமுகங்கள்மூலம் ஏற்றுமதி செய்யப்படும் மிளகு, ரப்பர், மணிலாக்கொட்டை ஆகிய ஏற்றுமதிப் பொருள்களுக்குக் கோடிக்கணக்கில் டில்லி சர்க்காருக்கு வரி செலுத்துகிறோம். அதைவிட அதிகமாக இங்கு இறக்குமதி ஆகும் பொருள்களுக்கு வரி தருகிறோம். இங்கிலாந்தில் செய்யப்படும் ஒரு பெட்ரோமாக்ஸ் விளக்கு 15 ரூபாய்க்கு அங்கு விலையாகிறது என்றால்,சென்னை துறைமுகத்தில் அது இறங்கியதும் அதற்கு இறக்குமதி வரி 10 ரூபாய் டில்லி அதிகாரிகளால் வசூலிக்கப்படுகிறது. உடனே சென்னையில் உள்ள மொத்த வியாபாரிக்கு அதன் அடக்கம் 25 ரூபாய் ஆகிறது. அவன் சில்லறை வியாபாரிக்கு 30 ரூபாய்க்கு விற்கிறான். அவன் 35 ரூபாய்க்கு யாரோ ஒரு முத்தனுக்கு விற்கிறான். அவனுக்குத் தெரியாது தான் விளக்கிற்கெனத் தந்த 35 ரூபாயில் 10 ரூபாய் டில்லிக்கு வரியாகச் செலுத்தப்பட்டுள்ளது என்பது. இவ்வாறே நாம் வாங்கும் வெளிநாட்டுச் சாமான்களான, மோட்டார், சைகிள், கடியாரம், பேனா, வாசனைத் தைலங்கள்,பொம்மைகள், எஞ்சின்கள், யந்திரங்கள் அனைத்திற்கும் கோடிக்கணக்கில் வரி தருகிறோம்—வரி தருகிறோம் என்ற நினைவே இல்லாமல். புகையிலைவரியின்மூலம் மட்டும் 10 கோடி ரூபாய்கள் சென்ற ஆண்டில் நாம் கொடுத்திருக்கிறோம். வேறு எந்த ராஜ்யமும் தராத அளவு கொடுத்திருக்கிறோம். இவ்வளவு வரிகளை வாரிக் குவித்துக்கொள்ளும் டில்லி நமக்கெனத் தந்தது என்ன? தொல்லை தவிரவேறில்லை. எல்லோருக்கும்பொதுஎன்பதாகஒருராணுவத்தைக்கட்டிவைத்துத்தீனிபோடுவதைத்தவிர வேறு எந்தக் குறிப்பிட்ட காரியத்திலும் நமக்குப்பங்கு இல்லை. ராணுவமும் வடநாட்டில் உள்ள அநாகரிமான இந்து முஸ்லீம் பிரச்னையைத்தீர்க்க அடிக்கடி பயன்படுகிறதேதவிர, நமக்குச் செய்ததென்ன? ராணுவம் துணைக்கு வரவேண்டிய எத்தனையோ வாய்ப்புகளில் நாம் ஏமாந்துவிட்டிருக்கிறோம். மழையின்மையால் கிணறுகள் நம் நாட்டில் வறண்டுபோயுள்ளன. ராணுவத்தினரும் அவர்கள் வசமுள்ள பெரிய இயந்திரங்களும் கிணறுகளை ஆழப்படுத்தித் தந்திருக்கலாம். தஞ்சை திருச்சிமாவட்டங்களில் புயல்வீசிப்பெரும்சேதம் விளைந்தபோது தவித்த மக்களுக்கு இராணுவம் துணைபுரிந்திருக்கலாம். செய்யவில்லை. எப்படிச் செய்யும், ஆதிக்கமும் அதிகாரமும் டில்லியில் குவிக்கப்பட்டிருக்கும்போது? இப்படி நம்மிடம் இருந்து வரியின்பெயரால் டில்லி செல்லும் கோடிக்கணக்கான ரூபாய்கள் அத்தனையும் வடநாட்டில்.வாழும் மக்களின் ஏற்றத்திற்காகவே பயன்படுத்தப்படுகின்றது.

இந்திய உபகண்டத்தின் பெரும் தொழில்களனைத்தும் வடநாட்டு முதலாளிகளிடத்திலே, சுருக்கமாகச் சொன்னால், இந்தியப்பொருளாதாரமே வடவரின் கைப்பொம்மையாய் இருக்கிறது. இந்த நிலையில் டில்லியில் முழு அதிகாரத்துடன் வீற்றிருக்கும் மத்திய சர்க்காரும் வடவரின் கையிலே. சர்க்கார் இமயம் முதல் குமரிவரை உள்ளமக்களிடமிருந்து பெறும்வரிப்பணம முழுவதையும் வட நாட்டு மக்களுக்குப் பயன்படும் வகையிலேயே 'செலவழித்துக் கொண்டிருக்கிறது.

இந்தநிலையில் திராவிடம் டில்லித் தொடர்பை அறுத்துக் கொண்டு தனியரசாய் அமைவதை விரும்பாதவன் ஒன்றும் அறியாத ஏமாளியாய் இருக்கவேண்டும். அல்லது எல்லாம் தெரிந்தும் கொள்ளைக்காரர்களிடம் இலஞ்சம் வாங்கிக் கொண்டு நாட்டைக் காட்டிக்கொடுக்கும் துரோகியாய் இருக்க வேண்டும்.

ஏனெனில், நாட்டின் இன்றைய அரசியலில் சுதந்தரமற்று டில்லியின் கட்டளைகளை எதிர்நோக்கி வாழ்ந்து கொண்டிருக்கும் அடிமை நிலை, பொருளாதாரத்தில்பறிகொடுக்கும், கொள்ளை கொடுக்கும் ஏமாந்த நிலை ஆகிய நிலைமைகளும் திராவிடநாட்டு விடுதலையைத்தான் மருந்தாகக் காட்டுகின்றன.

இந்த நிலைமைகள் மட்டுமல்லாமல் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது வெள்ளையன் வருவதற்கு முன் இந்தியா என்ற அரசியல் அங்கம் (Political unit) உலகில்இருந்ததாகவே தெரியவில்லை. அதாவது ஒரு சர்க்காரின் கீழ் இந்தியா என்ற நாடு இருந்ததாக இல்லை. இந்தியா என்பது ஒருபூகோளப்பெயராகவே திகழ்ந்து வந்திருக்கிறது. எப்படி பல தனித்தனி நாடுகளைக்கொண்ட ஐரோப்பாவின் ஒரு பிரதேசத்திற்கு பால்கன் தீபகற்பம் என்று பெயரோ, மற்றும் ஸ்வீடன், நார்வே ஆகிய இரு நாடுகளையும் சேர்த்து ஸ்காண்டிநேவியா என்று அழைக்கிறோமோ, அதே போல் இந்திய தீபகற்பம் என்பது ஆசியா கண்டத்தின் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் பூகோளப் பெயரே தவிர, ஒரு சர்க்காரின் கீழ் இருந்த ஒரு நாட்டின் பெயராக அது விளங்கியதில்லை.

வெள்ளையனுடைய துப்பாக்கிகள், மெல்ல சென்னையை வென்று, அய்தராலி, திப்பு ஆகியோரை வென்று, மராட்டியத்தைப் பிடித்து மொகலாய மன்னர்களைச் சதி செய்தும், வென்றும். இந்திய தீபகற்பத்தில் கைப்பற்றிய பிரதேசங்கள் அனைத்தையும் சேர்த்து, இந்திய சாம்ராஜ்யம் (Indian Empire) என அழைத்தபோதுதான், இந்தியா என்ற பூகோளப் பெயர், ஒரு அரசியல் பெயராக மாறிற்றே தவிர, வேறில்லை என்பது விளங்குகிறது. அன்னியனிடம் ஒரே சமயத்தில் தோற்ற இனங்கள் என்பதில் ஒரு ஒன்றுபட்ட தன்மை, நமக்கும் வடவர்களுக்கும் ஏற்பட்டது தவிர, கலாசாரத்தில், நாகரிகத்தில், மொழியில், முன்வரலாற்று நிகழ்ச்சிகளில், வடக்கையும் தெற்கையும் ஒன்றுபடுத்தி ஓரினமாக்கக்கூடியது எதுவும் இல்லை. வெள்ளையனுடைய இந்தியா என்னும் பொது சர்க்காரின்கீழ் வாழ்ந்த கடந்த இரு நூறு ஆண்டுகளில்கூட அது ஏற்படவில்லை. அது ஏற்படவில்லை என்பதை நிரூபிக்க ஆயிரம் நிகழ்ச்சிகள் அடுத்தடுத்துக் கூறலாம்.

ஒரே ஒரு சம்பவத்தைமட்டும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். பலமாதங்களுக்கு முன்பு பீஹாரில் பஞ்சம் வருமோ என அந்த சர்க்கார் அஞ்சிப் பஞ்ச நிவாரணத்திற்காகச் சில பணிகளை மேற்கொண்டனர். அவைகளில் ஒன்று வாய்க்கால் வெட்டுவது. அந்தச் சமயத்தில் நேரு அவர்கள் அத்தகைய வாய்க்கால் வெட்டுமிடம் ஒன்றிற்குப் பறந்து சென்று அங்கு குதித்தார். சட்டையின் கைகளை மேலே சுருட்டிவிட்டுக்கொண்டு, பக்கத்திலிருந்தவனிடமிருந்த மண்வெட்டியைப் பிடுங்கினார். விழியால் போட்டோக்காரனை அழைத்தார். அவன் படம் எடுத்தான். இவர் வெட்ட ஆரம்பித்தார். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், ஒரு விளம்பரப் பிரியர் என்பதற்கல்ல. பீஹாரிலே பஞ்சம் என்றதும் அவருடைய சதை ஆடுகிறது! உடனே ஏதாவது செய்யவேண்டும் என்றஎண்ணமும், துயர்ப்படும் 'அவரது' மக்கள் மத்தியில் சென்று ஆறுதல் கூறவேண்டுமென்ற அக்கரையும் பிறக்கிறது. அதுமட்டுமல்ல; நம்மெல்லோருக்கும் பொதுவான டில்லி கஜானாவிலிருந்து பீஹார் பஞ்ச நிவாரணப் பணிகளுக்கு 4 கோடி ரூபாய்வரை உதவவும் அவருக்கு ஆசை பிறக்கிறது. அதேநேரத்தில்கூட அலை, கடந்த 6 வருஷ காலமாகதென்னாட்டில் நாடு முழுவதும் பஞ்சம். பஞ்சப் பிரதேசங்களை வந்து பார்க்க வேண்டுமென்றஎண்ணமும் இல்லை. பலமுறை கெஞ்சித் தெண்டனிட்டுக் கேட்டும் நேருவின் சர்க்கார் ஒரு தம்பிடிகூட நம்மிடமிருந்து பறித்த பணத்தில் உதவியாகவோ கடனாகவோகூட அளிக்கவில்லை. மேலும், அண்மையில் தஞ்சை திருச்சி மாவட்டங்களில் பெரும் புயல் அடித்து, மக்கள் நடுக்கும் குளிரில் தெருத்தெருவாக அலைந்தனர், ஒண்டக்கூட இடமின்றி. நேருவுக்குத் தோன்றவில்லை, அந்தத் துயர்ப்படும் மக்களைப் பார்க்க வேண்டுமென்று. ஆனால், அதே நேரத்தில், புயலால் தாக்குண்ட பிரதேசத்திற்கு மூன்நூறு மைல் தொலைவில் திருவிதாங்கூர் கொச்சி ராஜ்யத்தில், டில்லியின் அரசியல் புழுக்கத்தினின்றும் ஓய்வு பெற, சில நாட்களை உல்லாசமாகக் கழிக்க வந்திருந்தார். உப்பங்கழிகளில் உல்லாசப் படகேறி குடும்பத்தோடு இன்பப் பொழுது போக்கினார், கேரளத்துத் தென்னஞ் சோலைகளினூடே. பின் அது சலித்தபோது மலைமீதேறி,அங்கு அடவியிலுள்ள வனவிலங்குகளான யானைகளையும், புலியையும், ஓநாயையும், மானினங்களையும், கரடிகளையும் கண்டு களிக்க விரும்பினர். மலையில் மகாராஜாவின் கண்ணாடி பங்களாவில் இரவு முன்னேரத்திற்கே சென்று பல கணி வழியே; கீழே ஓடும் காற்றில் நீர் பருகவந்த வன விலங்குகளையும், நிலவொளியில் காதல்புரியும் காட்டானை ஜோடிகளையும்

(6-ம் பக்கம் பார்க்க)

5-ம் பக்கத் தொடர்ச்சி

காலத்தில் இந்த முறையின்படி வரி விதித்து ஓரளவுக்குச் சமுதாயத்திலிருக்கும் வருமானம், சொத்து முதலியவைகளிலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கு வழி ஏற்படுகிறது. பரம்பரைச் சொத்துரிமை பாத்தியதையால் செல்வம் சில இடங்களில் குவிந்திருப்பதையும், நாளடைவில் ஒரு சிலரிடமே குவிந்துகொண்டு போவதையும் இந்த முறையினால் தடுக்க முடியும்.

மேலும், இன்று பணக்காரர்களாயிருக்கும் பலர், தங்கள் சொந்த முயற்சி இருந்தபோதிலும்கூட, அரசாங்கத்தின் ஆதரவில்லாமல் அவ்வளவு பணம் சேர்த்திருக்கமுடியாது. பஸ் பெர்மிட்கள்மூலம் போட்டியில்லாமல் ஒரு பிரதேசத்தில் பஸ்கள் விடுவதற்கு அரசாங்கம் தனிஉரிமை வழங்கியதனாலேயே சிலர் பஸ் முதலாளிகள் ஆகிறார்கள். டாடா இரும்பு எஃகு தொழிற்சாலைக்கு அரசாங்கம் அடிக்கடி மான்யம் அளித்தும் வெளிநாட்டுச் சரக்குகளின் போட்டியைக் குறைக்க அவைகளின்மேல் தீர்வைகளை சுமத்தி விலையை உயர்த்தியும் டாடா சாமான்கள் இந்திய மார்க்கெட்டில் விலையாவதற்கு உதவி செய்ததால்தான், அந்தக் கம்பெனிக்காரர்கள், இன்று பெரிய முதலாளிகளாக இருக்கிறார்கள். அதனால் பெரும் பணக்காரர்கள் அநேகமாக எல்லோரும் அரசாங்கத்தினிடமிருந்து சலுகைகளோ, ஆதரவோ, பண உதவியோ பெற்றுத்தான் நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, அவர்களின் வருமானத்தில் ஒரு பங்கை அரசாங்கம் வரியாக எடுத்துக்கொள்வதில் தவறில்லை.

ஆனால், அளவுக்கு மீறி வரியை அதிக வருமானங்களின்மேல் விதித்துவிட்டால், மக்களுக்கு சேமிக்கவேண்டுமென்ற எண்ணம் குறைந்துவிடும். தொழில் வளர்ச்சி தடைப்படும்.

மேலும், வரி விகிதம் அதிகரிக்க அதிகரிக்க, வரி கொடுக்காது அரசாங்கத்தை ஏமாற்றும் முயற்சிகளும் அதிகரிக்கும்.

அதுமட்டுமல்ல, ஒரு ராஜ்யத்தில் அதிக வருமானங்கள்மீது அபரிமிதமான வரிகள் சுமத்தப்பட்டால் மக்கள் அங்கே முதல் போட்டு, வியாபாரமோ தொழிலோ நடத்துவதற்குப் பிரியப்படாமல், தங்கள் முதலீட்டை மற்றக் குறைந்த வரிகள் உள்ள வெளி நாடுகளுக்கு அனுப்பிவிடுவார்கள். அதனால் உள்நாட்டு தொழில்அபிவிருத்தி பாதிக்கப்படும்.

ஆங்கிலேயர் ஆட்சியில் சென்னை மாகாணத்தில் வருமான வரிவிதிப்பு இருந்தபோது, புதுக்கோட்டை முதலிய சமஸ்தானங்களில் வரி விதிப்பு இல்லை. அதனால், அநேகர் அந்த சமஸ்தானங்களுக்குச் சென்று பெரிய ஆலைகளையும், வியாபார ஸ்தாபனங்களையும் ஆரம்பித்தார்கள்.

உயரும் விகிதாசார முறையில் வரி விதிக்கும் முறையில் குறைபாடுகள் இருந்தாலும், அவை அடிப்படைக் கொள்கையில் தவறு இருப்பதனால் ஏற்படுவது அல்ல. அவைகள் நிர்வாகத்தில் ஏற்படக்கூடிய தவறுகள்தான் என்பதைக் கவனிக்கவேண்டும்.

★

மஜீது குடும்ப நிதி

நெல்லிக் குப்பத்தில் மஜீது அவர்களின் பெற்றோர்கள் பட்டிருக்கும் (ரூபாய் 236) கடனைத் தீர்த்து வைப்பதற்கு பொதுச் செயலாளர் அவர்களின் அனுமதிப்படி 3—5—53 இரவு 12 மணிக்கு தோழர் மு. கருணாநிதியும்—மாவட்ட செயலாளர் பாலகுருசாமியும் நெல்லிக் குப்பம் சென்று அந்தக் கடன்களைத் தீர்த்துவிட்டு அவர்களின் குடும்பத் தற்காலிக செலவிற்கும் பணம் தந்து, விரைவில் அவர்கள் பெயருக்கு நிலம் வாங்கும் பொறுப்பையும் ஊரிலுள்ள முக்கயஸ்தர்களிடம் ஒப்புவித்து விட்டு அன்றிரவே திரும்பினார்கள்.

கருணாநிதி—அறிவிப்பு

டால்மியாபுரம் போராட்டத்தின் காரணமாக திருச்சி மாவட்டத்திலே தொடர்ந்து பணியாற்ற வேண்டியிருப்பதால் வேறு மாவட்ட கூட்டங்களுக்கு வர இயலாத நிலையிலிருக்கிறேன் என்பதோடு, என்னைக் கேட்காமலே, அனுமதி பெறாமலே, மாநாட்டு நிகழ்ச்சிகள் என்ற பெயரிலும் பொதுக் கூட்டங்களிலும் என் பெயரை விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்கும் அதில் கலந்துகொள்ள முடியாமைக்கும் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு. கருணாநிதி

★

காணவில்லை

பெயர், துரைசாமி. தகப்பனார் பெயர், ந. முத்துராம செட்டியார். வயது, 13 மாநிறம். நாலரை அடி உயரம். அணிந்திருக்கும் சட்டையில் 1462 என்ற அடையாளம் இருக்கும். வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தவன் எப்படியோ காணாமற் போய் விட்டான். மேற்படி அடையாளங்கள் உள்ள பையனை யாராவது கண்டால், அன்பு கூர்ந்து உடனே அறிவிக்கவும்.

பி. முத்துராம ரெட்டியார்,
கீக்களூர் கிராமம் போஸ்ட்,
வயா: திருவண்ணாமலை, N. A.

"டால்மியாபுரம்" போராட்டம்

செயற்குழு அமைந்தது

2—5—53 பிற்பகல் 3 மணிக்கு திருச்சி தி. மு. கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் அம்பில் தர்மலிங்கம் தலைமையிலும் தோழர் மு. கருணாநிதி முன்னிலையிலும் திருச்சி மாவட்ட செயற்குழுவினர்கள்,

'டால்மியாபுரம்' போராட்டத்திற்காக கீழ்க்கண்ட போராட்ட செயற்குழுவைத் தேர்ந்தெடுத்தனர்.

1. மு. கருணாநிதி தலைவர்
2. அம்பில் தர்மலிங்கம் (அம்பில்)
3. எம். எஸ். மணி (திருச்சி)
4. கே. ஆர். ராஜா (குளித்தலை)
5. கே. கே. மாணிக்கம் (காட்டூர்)
6. மீ. சு. இளமுருகு (மணப்பாறை)
7. தம்புசாமி (கல்லக்குடி—டால்மியாபுரம்.)

திருத்தணி தமிழருக்குத்தான் என்பது ஜனநாயக ரீதியில் முடிவாகிவிட்டது

வட ஆற்காடு ஜில்லா தி. மு. க. காரியதரிசி அறிக்கை

அரக்கோணம் மே 1, திருத்தணியில் வாழும் மக்களில் 100-க்கு 90 பேர் தமிழர்கள் என்றும் அவர்கள் கொள்வன கொடுப்பன, தமிழ் நாட்டில் என்றும் பழக்க வழக்கங்கள் தமிழ் என்றும் ஆதார பூர்வமாக காட்டி திருத்தணி ஆந்திரத்தோடு சேர எந்தவிதத்திலும் நியாயமில்லை என்று கூறியும், தமிழ் மக்களின் தீர்ப்புக்கு எதிராக திருத்தணி போன்ற தமிழ்ப் பகுதிகள் ஆந்திரத்தோடு சேரவேண்டுமென பிரதமர் நேரு அறிக்கை இருப்பது வருந்தத் தக்கது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மறியல்

திருத்தணி, புத்தூர் பகுதிகள் தமிழ் நாட்டுடன் சேரவேண்டுமென்று கடந்த 15 நாட்களாக சாத்வீக மறியல் செய்து வருவது யாவரும் அறிந்ததாகும். இந்த நிலையில் 29—4—53ல் திருத்தணி நகரசபை தேர்தல் வந்தது. அதில் திருத்தணி தமிழ் நாட்டுடன் சேருவதா? ஆந்திரத்துடன் சேருவதா என்ற அடிப்படையை வைத்து தேர்தல்நடந்தது. ஆந்திரத்தோழர்கள் 10 மெம்பர் ஸ்தானத்திற்கும்—தலைவர் ஸ்தானத்திற்கும் நின்றார்கள். அவர்களை எதிர்த்து 11 தமிழ்த்தோழர்கள் நகர மக்கள் கூட்டணியின் சார்பில் நிறுத்தி வைக்கப்பட்டார்கள்.

11க்கு 10 வெற்றி

10 ஸ்தானத்தில் 9 மெம்பர்கள் ஸ்தானத்தைத் தமிழர்கள் (ந. ம. கூ.) பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்கள். ந. ம. கூ. ஐ. எதிர்த்து நின்ற ஆந்திரத் தோழர்களும் — திருத்தணி ஆந்திரத்துடன் சேரவேண்டுமென்று பிரசாரம் செய்து ஓட்டு சேகரித்த 3 அபேட்சகர்கள் டிபாசிட் இழந்தனர். இதில் குறிப்பிடத்தக்கது — 1-வது வார்டில் தமிழரை எதிர்த்து நின்ற தெலுங்கு அங்கத்தினருக்கு ஒரே ஒரு ஓட்டு அதுவும் அவருடைய ஓட்டு.

1000 ஓட்டுகள் அதிகம் பெற்று தலைவர் ஸ்தானத்தைத் தமிழர் (ந. ம. கூ.) வெற்றி பெற்றார்.

இதுவரையில் ஆந்திரர்கள்தான் நகரசபையிலும் மற்றும் எல்லா அதிகாரத்துறையிலும் பதவி வகித்துவந்தார்கள் சித்தூர் ஜில்லா போர்டு தலைவரும் ரெட்டிஜன் ஆந்திர எம். எல். ஏ. க்களும் பலத்த பிரச்சாரம் செய்தும் படுதோல்வி அடைந்தார்கள்.

இங்கு பெரும்பகுதியினர் தமிழர்கள்தான் வாழ்கிறார்கள். எனவே இது தமிழ் நாட்டுடன்தான் சேரவேண்டு மென்பது அதிகாரப்பூர்வமாக நிரூபணமாகிவிட்டது. எனவே இந்த மகத்தான வெற்றியால் சித்தூரையும் திருத்தணியையும் தமிழ் நாட்டுடன் சேர்க்கவேண்டுமென்று மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் உணர ஓர் நல்ல சந்தர்ப்பமாகும்.

அன்புள்ள,
A. L. C. கிருட்டினசாமி,
மாவட்டச் செயலாளர்.

குறிப்பு: தமிழர்கள் வெற்றி பெற வட ஆற்காடு மாவட்ட தி. மு. க. வும் சித்தூர் மாவட்ட தி. மு. க. கிளைகளும் முக்கிய பங்கெடுத்துக்கொண்டதைத் திருத்தணி தமிழ் மக்கள் பாராட்டுகிறார்கள்.

★

நடை பெற்றவை

மாயாவ 24—4—53 இலங்கை தி.மு.க. கிளையின் சார்பில் ச. வெ. கதிரேசன் பி. ஏ. தலைமையில். எ. இளஞ்செழியன், கே. பி. சிவம், ஏ. அருணன் பி. ஏ., ஏ. நாச்சியப்பன், சி. பி. சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருமணம்

பொட்டல் தோழர் முக்கையாவுக்கும் தோழியர் குளத்துமணிக்கும் மணமகன் இல்லத்தில் 4-5-53 அன்று வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

புயல் நிவாரண நிதி

ரூ. 27535—15—2

[இதுவரை]

முன் கணக்குப்படி	27408—4—2
நெடுஞ்செழியன் மூலம் சென்னை 23-வது வட்ட தி. மு. க.	126-10—0
சென்னை குழந்தை திருவள்ளுவன்	1—1—0
	27535-15—2

மு. கருணாநிதி
புயல் நிதிக்குழு செயலாளர்
தி. மு. க.

உடன் பிறந்தே கொல்லும் வலிகளான

நாட்பட்ட பாரிச வாய்வு, இளம்பிள்ளை முடக்கு, ஆருதரணம், வாதக் கை கால்கள், தீராத கட்டிகள், விரை நோய், விஷக்கடிகள், விஷநீர் புரைகள், முடக்குவாதம் முதற் பல வலிகளுக்கு சத்குரு.

விஷ குரு
விலை ரூ. 3

விவரங்களறிய:—
R. குமுதம் & கம்பெனி,
7, கிருஷ்ணவிலாசம்—
பாட்டர் தோட்டம்,
சென்னை-2.

2-ம் பக்கத் தொடர்ச்சி

கண்டு ரசித்துக் களிப்படைந்து கொண்டிருந்தார் எனச் சேதி வந்தது.

இதை ஏன் இவ்வளவு ஆத்திரமாகக் கூறுகிறேன் என்றால், பீஹாரில் பஞ்சம் என்றதும் துடித்த அவரது உள்ளம், ஆடிய அவரது உடம்பு, தமிழகத்தில், ராயலசீமையில் பஞ்சம் என்ற போதும், தஞ்சையில் திருச்சியில் புயல் என்றபோதும் ஆடாமல் அசையாமல் அமைதியாக — புதுவித இன்பங்களைத் தேடிக்கொண்டிருந்ததன் பொருளைப் புரியாதவர்கள் புரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காகவே இதைச் சொல்லுகிறேன்.

இத்தனைக்கும் வடநாட்டாருக்குள்ளேயே நேரு ரொம்பவும் யோக்கியமானவர், கருணையுள்ளவர் என்று பெயர். இவரே,'ரோம்நகரம் பற்றியெரியும்போது பிடில்வாசித்த நீரோ'வாகி விட்டார் என்றால், இனி இவருக்குப்பின் வரும் இவரது வாரிசுகள் எப்படி இருப்பார்கள் என்பதை நாமே யூகித்துக் கொள்ளலாம்.

ஆகவே இந்தியாவுக்குப் பெயரளவில் சட்டரூபமாய் வெள்ளையரும் வடவரும் செய்துகொண்ட ஒருஒப்பந்தத்தால் ஒரு சர்க்கார் என்றுகிட்டதே யொழிய, இந்தியர்கள் என்று ஒரு இனம் தோன்றவில்லை. அவர்களுக்கு முன்னும் இருந்ததில்லை. இனியும்தோன்றவழியில்லை. நமக்குத் தலைவன் வடநாட்டில் இல்லை. வடநாட்டில் வடநாட்டு மக்களுக்குப் பாடுபடும் வடநாடுத் தலைவர்கள் தான் உண்டு. நமக்குத் தலைவர்கள் நம் நாட்டில் தான் தோன்ற முடியும். வீணே வடநாட்டுக்காரர்கள் சிலரை நம் தலைவர்களென நம்புவதும், அங்கு தலைவர்களைத் தேடுவதும் வீண் வேலையாகும். ஆகவே இன்றைய திராவிட மக்களின் வாழ்க்கை நிலையும், வடவர்கள், அவர்களின் தலைவர்கள் ஆகியோருடைய எண்ணங்களும் செயல்களும் எல்லாம் திராவிடநாட்டுப் பிரிவினை ஒன்றுதான் திராவிடரின் நல்வாழ்வுக்கு வாக்குறுதியாய் இருக்க முடியும் என்பதையே உறுதிப்படுத்துகின்றன.

அடுத்து, நம் மக்களிலே சிலருக்கு ஓர் அச்சம் உண்டு. இந்தியா இவ்வளவு பரந்த நாடாய் இருப்பதால் தான் ஒரு பாதுகாப்பு இருக்கிறது. பக்கத்து நாடுகள் படையெடுக்கப் பயப்படுகின்றன. பிரிந்து சிறு சிறு நாடுகளாய் 'சிதறி' விட்டால், பழையபடி ஏதாவது ஒரு அன்னிய அரசு வெள்ளையனைப் போல மீண்டும் அடிமை கொண்டு விடும் என்று அஞ்சுவோரும் உள்ளனர். திராவிட நாடு கூடாதென்பதற்கு அந்த அச்சத்தை வாதமாகப் பயன்படுத்துவோரும் உள்ளனர்.

இன்றைய உலகு 'பானிப்பட்' 'பிளாசி' 'வந்தவாசி' காலத்திலில்லை. நவாபுகள், சுல்தான்கள் காலமல்ல. இன்றைய உலகில் ஒரு நாட்டின் பாதுகாப்பு அதன் பரப்புஎவ்வளவு என்பதிலேயோ, ராணுவம், விமானங்கள், கப்பல்கள் ஆகியவை எத்தனை உண்டு என்ற கணக்கிலேயோ இல்லை. அந்தந்த நாட்டு மக்களின் விவேகத்தையும், அவர்களுக்கு அமையும் தலைவர்களின் ஆற்றலிலும், நாணயத்திலும் தான் ஒரு நாட்டின் பாதுகாப்பு இருக்கிறது. முன்புபோல் ஒரு நாடு சின்ன நாடாய் இருக்கிறது என்பதற்காக வம்பிழுத்து ஒரு பெரிய நாடு போர் தொடுத்துவிட முடியாது. மற்ற நாடுகள்வாளா இரா. உதாரணமாக, இந்திய யூனியன் எவ்வளவு பரந்த அளவுள்ளது. இவ்வளவு பரந்த அளவுள்ள இந்திய யூனியனில் பாண்டிச்சேரி, காரைக்கால்,கோவா ஆகியவைகளில் முன்னிரண்டு ஊர்களும் பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் ஆட்சியிலும், கோவாபோர்ச்சுக்கீஸியரிடமும் இருக்கின்றன. இந்தியாவின் பரப்பை எண்ணிப் பார்க்கும் போது இவைகள் சிறு புள்ளிகள். ஆனாலும் நாம் உலகின் முன் முறையிட முடியுமே தவிர, படையெடுத்து அந்தப் 'புள்ளிகளை' அழித்துவிட முடியாது. பாண்டிச்சேரியில் இந்தியத் துப்பாக்கிகள் வெடிக்க ஆரம்பித்த மறுகணம் உலகுக்கு அந்தச் சேதியனுப்பப்பட்டு விடும். சில மணி நேரத்தில் உலக வல்லரசுகள் இரண்டு கோஷ்டிகளாகப் பிரிந்து இந்தியாவின் சம்மதத்தையே கூட எதிர்பார்க்காமல் இந்திய உபகண்டத்தில் 'சமாதானத்தை' நிலைநாட்ட இந்திய மண்ணில் போர் துவக்கி நாடே சுடுகாடாகக் கூடிய பேராபத்து இருக்கிறது.

இன்று கொரியாவில் வடகொரியருக்கும், தென் கொரியருக்குமா போர் நடக்கிறது? வட கொரியா சார்பில் சீனவும், தென் கொரியா சார்பில் அமெரிக்காவின் தலைமையில் சில நாடுகளும் மோதிக்கொள்கின்றன.

ஆகவே ஒரு நாட்டின் பாதுகாப்பு என்பது ராணுவத்தின் அளவையோ, பரப்பளவையோ பொறுத்ததல்ல. திராவிடம் சிறுநாடு. ஆகவே பாதுகாப்பில்லை, என்பது பத்தாம் பசலிகளின் பேதைமைக் கூற்றே தவிரவேறில்லை.

பொதுக்குழு

தி. மு. க. பொதுக்குழு, மே 31, ஞாயிற்றுக்கிழமை அரக்கோணம் (வடஆர்காடு) டவுன் ஹாலில் கூட ஏற்பாடாகி இருக்கிறது.

அண்ணாதுரை.

நாளுக்கு நாள் திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை வலியுறுத்தக் கூடிய வகையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இச்சமயத்தில் திராவிடத்தில் எந்தக் கட்சியாயிருந்தாலும் திராவிட விடுதலையைக் குறிக்கோளாக வைத்துக்கொள்ளாமல் வேறு எத்தகைய உலகமகாமேதாவிகளின் தத்துவங்கள் இலட்சியங்களாகக் கொண்டிருந்தாலும் அது மக்களையும் வாழ வைக்காது, தானும் வாழாது.

எவருடைய ஆதரவையும் பெறக் காத்திராமல் திராவிடநாட்டைப் பெற நாம் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கி விட்டோம். முதல் களம் டால்மியாபுரம். விரைவில் அங்கே தோழர் கருணாநிதியும், திருச்சி மாவட்டத் தோழர்களும் வெற்றி முரசம் அறைவதைத் திராவிடம் கேட்கப் போகிறது.

"திராவிட நாடு திராவிடருக்கே"

பிறப்பு

"சேலம் மாவட்ட தி. மு. க. பொருளாளரும் பொதுக்குழு உறுப்பினருமான ஏரியம்பட்டி தோழர் B. M. குப்புசாமி அவர்களின் துணைவியாருக்கு 19-4-53ல் ஆண் குழந்தை பிறந்தது.

மக்கள் என்ன கூறுகிறார்கள்?

மாதவிடாய் (தேவி பில்ஸ்)

Patent Regd- No- CDL- 688

NOTE: Our product DEVI PILLS has been duly analysed by the Director, Central Drugs Laboratary of India under Patent Regd. No. CDL/688-

ஆயிரக்கணக்கில் வந்துள்ள கடிதங்களில் சில:

1. வெகு சீக்கிரத்தில் என்மனைவி பூரண குணம் அடைந்தாள்.

Irumattur P. O. Havur Tk.

ஐயா,

நான் தங்கள் "தேவி பில்ஸ்" மருந்தை என் மனைவிக்கு 17-5-51 முதல் 21-5-51 வரை கொடுத்ததில் இக்குறுகிய காலத்திற்குள் என் மனைவி பூரணகுணம் அடைந்து விட்டாள். ஆகையால் இம்மருந்தை மற்ற சகோதரிகளும் எவ்வித பயமும் இல்லாமல் உபயோகப்படுத்தலாம்.

Sd. A. Sivanandam Land-Lord.

* *

2. ஒரு சிறந்த துணைக்கருவி.

Sembanar Koil, Memathur P. O.

ஐயா,

மாதவிடாய் கோளாறினால் கஷ்டப்படும் மாதர்களுக்கு விடுதலை பெற தங்கள் "தேவி மாத்திரை" ஒரு சிறந்த துணைகருவி என்பதை என் அனுபவத்திலிருந்து மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எதிர் காலத்தில் தலைசிறந்த தொண்டாற்றும் என்று நம்புகிறேன்.

(Sd) M- Rathnasabapathy Karnam-

* *

3. 6 மாதங்களாக நின்று போன மாதவிடாய் எவ்விதகஷ்டமுமில்லாமல் வெகு சீக்கிரத்தில் சுலபமாக வெளிவரச்செய்தது

Thevaram P- O

ஐயா,

தங்கள் "தேவி பில்ஸ்" மருந்தை உபயோகித்ததில் எவ்வித கஷ்டமுமில்லாமல் 6 மாதங்களாக நின்று போன மாதவிடாயை வெகுசீக்கிரத்தில் சுலபமாக வெளிவரச்செய்தது. இதனால் மற்றவர்களுக்கும் இம்மருந்து பயன் படுமென்று நம்புகிறேன்.

(Sd.) M. Sourimuthu Maistry.

4. தொல்லை போக்கும் தன்மையுள்ள திவ்யமருந்து.

Saliamangalam P. O.

ஐயா,

தங்கள் மருந்து "தேவி பில்ஸ்" மனக் கிலேசம் அடையும் மாதர்களுக்கு தேவாமிர்தம் போன்றதோடு யாதொரு கெடுதலும் இன்றி நன்மையளிக்கும் திவ்ய மருந்தாகும் என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

Sd K- K- Chandrasekharam Pillai-

மாதவிடாய்

தேவி பில்ஸ் (Regd- CDL. 688) எக்காரணத்தினும் எத்தனை மாதமானாலும் நின்றுவிட்ட மாதவிடாய் உடனே வெகு சீக்கிரமாகவும், சுலபமாகவும் வெளியாகும். அநேக நற்சாட்சி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள். உத்தரவாதம் உள்ளது.

விலை சாதா ரூ. 8-8-0. ஸ்பெஷல் ரூ. 10-8-0. (தபால் செலவு தனி)

MANUFACTURERS:

SEENU & CO.,

P. B. No. 1638 (H) MADRAS-1

Branch:

134, SERANGOON ROAD, SINGAPORE

Agents:

NEW COLOMBO MEDICAL STORES, 82, Main Street, COLOMBO—11.

5. வெகுநாட்களாக தடைப்பட்ட மாதவிடாயை வெளி வரச்செய்தது.

Kamalapuram P- O- Tanjore Dist-

ஐயா,

நான் தங்கள் "தேவி பில்ஸ்" மருந்தை உபயோகப்படுத்தியதில் ஆச்சரியமான பலனை அளித்தது, வெகு நாட்களாக தடைப்பட்டிருந்த மாதவிடாய் மீண்டும் ஏற்பட்டவுடன் எவ்விதகெடுதலும் இல்லாமல் சௌகரியம் செய்கிறது என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Sd- Rajagopalan, Mirasdar-

* * *

6. பூரணகுணம் அடையச் செய்தது.

Khrudwadi P- O- Sholapurre Dist-

ஐயா,

தங்கள் "தேவி பில்ஸ்" மருந்தை நான் உபயோகித்ததில் எனக்கு வேண்டிய அளவு பூரண குணம் அடையச் செய்ததால் இவ்வரிய மருந்தை மாதவிடாய்க்கோளாறினால் அவஸ்தைப்படும் மாதர்களுக்கு எவ்வித தயக்கமும் இன்றி உபயோகப் படுத்தலாம் என்று கூறுகிறேன்.

Sd- Miss Kuriew

* *

7. 3 கேஸ்களில் வெற்றி காண்பித்த அபூர்வ மருந்து.

Madanapalli P- O- Chittoor Dist.

ஐயா,

சீனு அண்டு கம்பெனியின் 'தேவிபில்ஸ்' மாத்திரை ஒரு அபூர்வமருந்து என் 3கேஸுகளிலும் கண்ட வெற்றி நிரூபித்து விட்டது. அப் பெரிய மருந்தை மற்றவர்களும் எவ்வித தயக்கமுமின்றி உபயோகப்படுத்தலாம்.

Sd- M V.Papanna Gownder The Nilagiris P. O.

*

8. பல மருந்துகளினால் பலனில்லாமல் கடைசியில் "தேவி பில்ஸ்" பூரணகுணமடையச் செய்தது.

ஐயா,

தங்கள் "தேவி பில்ஸ்" மருந்தை உபயோகப்படுத்தியதில் 7-நாளில் சந்தோஷகரமான குணத்தை அளித்தது. இந்த மருந்தினால் பலருக்கு நன்மை ஏற்படும் என்று நம்புகிறேன்.

Sd- -E M- K- Nair-

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram